# யா/யூனியன் கல்லூரி

# சைவநெறி

# 01.கடவுள்

01. கடவுளை 'பரம்பொருள்' எனக் கூறுவதற்கான காரணம் யாது?

ௐ கடவுளே உலகத்தில் உள்ள பொருள்கள் யாவிலும் மேலான பொருள் ஆதலால் அவரைப் 'பரம்பொருள்' என்கின்றோம். (பரம் - மேலானது)

02. 'கடவுள்' என்பதன் பொருள் யாது?

ௐ எல்லா உலகங்களையும் எல்லா உயிர்களையும் கடந்தும் அவற்றின் உள்ளேயும் இருப்பதால்தான் அவரைக் கடவுள் (கட + உள்) என்கின்றோம். சுருக்கமாகக் கூறின் கடவுள் எங்கும் உள்ளவர், எல்லாவற்றையும் கடந்தவர்.

03. பஞ்ச கிருத்தியங்கள் எவை? இறைவன் அவற்றைச் செய்வதற்கான காரணம் யாது?

ௐ படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்

ௐ ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்காக, தடத்த நிலையில் இவ் ஐந்தொழில்களைச் செய்கின்றார்.

04. கடவுளின் தன்மையை எவ்வாறு அறிந்து கொள்ளலாம்? இறைவன் நிர்விகாரி எனக் கூறப்படுவதன் காரணம் யாது?

ௐ கடவுள் இன்ன குணம் உள்ளவர், இப்படிப்பட்டவர் என்று எங்கள் அறிவினால் அறிந்து கொள்ள முடியாது. அவர் நமக்காகச் செய்யும் திருவருட் செயல்களினால் அவருடைய தன்மையை அறிந்து கொள்ளலாம்.

ௐ கடவுள் பஞ்ச கிருத்தியங்களைச் செய்யும் போது ஒரு வகையான மாறுபாடும் அடைவதில்லை. அத்துடன் இறைவன் எந்த விகாரமும் அடைவதில்லை. அதனால் இறைவன் 'நிர்விகாரி' என அழைக்கப்படுகின்றார்.

05. இறைவனின் திருவருட் சக்திகளாகக் கொள்ளப்படும் மூர்த்தங்கள் யாவை?

ௐ உமாதேவியார், விநாயகர், முருகன், வைரவர், வீரபத்திரர்

06. கடவுள் வழிபாட்டுக்கு நிகரான கருமங்கள் யாவை?

ௐ தர்மத்துக்குப் புறம்பாக நடக்காது இருத்தல்.

ௐ எல்லா உயிர்களையும் நேசித்தல்.

07. சொரூப நிலை, தடத்த நிலை என்பவற்றை விளக்குக.

ௐ சொரூப நிலை : குணம், குறிகளுக்கு அப்பாற்பட்ட நிலையே சொரூப நிலை (சுயரூபம்) ஆகும்.

ௐ தடத்த நிலை : ஆன்மாக்களுக்கு அருள்புரியும் பொருட்டு குணங்குறிகளோடு கூடிவரும் நிலை தடத்த நிலை எனப்படும். தடத்த நிலையில் இறைவன் எண்குணங்களை உடையவனாக விளங்குகின்றான்.

08. 'கடவுள் ஒருவரே' என்பதை வேதம் எவ்வாறு எடுத்துரைக்கின்றது?

ௐ 'உள்பொருள் ஒன்றே – அறிந்தவர்கள் அதனை பலவாறு கூறுவர்'' என வேதம் கூறுகின்றது.

09. தடத்த நிலையில் இறைவனது எண் குணங்களாகக் கூறப்படுபவை எவை?

- ॐ முற்றும் உணர்தல்
- ॐ இயல்பாகவே பாசங்களின் நீங்குதல்
- ॐ இயற்கை உணர்வினனாதல்
- ॐ வரம்பில் இன்பம் உடைமை
- ॐ தன்வயத்தனாதல்
- ॐ முடிவில் ஆற்றல் உடைமை
- ॐ பேரருள் உடைமை
- ॐ தூய உடம்பினராதல்

10. தவம் செய்தலுக்கு நிகரானது எது?

- ॐ அன்பு செய்தல்

11. பஞ்ச கிருத்தியங்களை விளக்குக.

| | |
|---|---|
| படைத்தல் (சிருஸ்டி) | ஆன்மாக்களுக்காக தனு, கரணம், புவனம், போகம் என்பவற்றை உருவாக்குதலே படைத்தல் ஆகும். |
| காத்தல் (திதி) | படைக்கப்பட்டவை இருக்க வேண்டிய காலம் வரையும் அவற்றைக் காப்பது காத்தல் எனப்படும். |
| அழித்தல் (சங்காரம்) | அக்காலம் முடிய அவற்றை அழிப்பது அழித்தல் ஆகும். |
| மறைத்தல் (திரோபவம்) | ஆன்மாக்களைப் பீடித்துள்ள மலத்தின் வீரியத்தைத் தடுத்தல் மறைத்தலாகும். |
| அருளல் (அநுக்கிரகம்) | ஆன்மாக்களை மலபந்தத்திலிருந்து முற்றாக நீக்கி, அவற்றுக்குப் பேரின்பத்தைக் கொடுத்தல் அருளல் ஆகும். |

## 02. சைவ வாழ்வு

01. புற ஆசாரங்களைப் பேணுவது மட்டும் போதாதது என்று கூறப்பட்டமைக்கான காரணம் யாது?

ॐ அக ஆசாரம் இல்லாத நிலையில் செய்யும் எந்த புற ஆசாரங்களால் எவ்வித பயனும் இல்லை.

02. இறையுணர்வோடு வாழவேண்டியதன் அவசியம் யாது?

ॐ 'இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்' என்று ஆறுமுகநாவலர் கூறியிருக்கின்றார். கடவுள் அருளாலேயே நமக்கு இந்த உடலும் உலகமும் உலகில் நாம் வாழும் வாழ்க்கையும் கிடைத்தன. ஆகையால் நாம் கடவுளிடம் நன்றியுணர்வு உள்ளவர்களாக வாழவேண்டும். கடவுள் மீது அன்புள்ளவர்களாக, பக்தி உள்ளவர்களாக வாழ்ந்து இறையின்பத்தைப் பெற வேண்டும்.

03. ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளைச் செவ்வனே செய்யாது விடுவதால் ஏற்படும் விளைவு யாது?

ॐ கடமைகளை ஒழுங்காகச் செய்யாதவர்களுக்கு கடவுளின் அருள் கிட்டாது. மாறாக பாவமே கிட்டும்.

04. இறை வழிபாட்டுக்கு இன்றியமையாதவை என்று இங்கு குறிப்பிடப்பட்டுள்ளவை எவை?

ॐ அகத்தில் அன்பும் நீதியும் ஒழுக்கமும் ஆகும்.

05. அட்ட புஷ்பங்கள் எனப்படுபவை யாவை? அவை ஏன் அட்ட புஷ்பங்கள் எனப்படுகின்றன?

| | | | |
|---|---|---|---|
| கொல்லாமை | பொறுமை | இரக்கம் | தவம் |
| ஐம்பொறியடக்கம் | உண்மை | அறிவு | அன்பு |

ஏனெனில் இவை அனைத்தும் அகப்பூசைக்கு (புறப்பூசையிலும் பார்க்க) இறைவனுக்கு உகந்த மலர்களாக விளங்குகின்றது.

06. இறைவன் உவக்கும் மலர்களாக விபுலானந்தர் குறிப்பிடுபவை யாவை?

ॐ உள்ளக்கமலம், கூப்பிய கைக் காந்தள், நாட்ட வழி நெய்தல்

07. ஒப்புரவு என்றால் என்ன?

ॐ மற்றவர்கள் மேல் அன்பு பாராட்டி அரவணைத்து அவர்களுக்கு உதவி செய்து வாழ்வதை ஒப்புரவு என்று கூறப்படுகின்றது.

08. 'படமாடக்கோயில்' எனத் தொடங்கும் திருமந்திரப் பாடலால் வலியுறுத்தப்படும் உண்மை யாது?

ॐ மக்களுக்குச் செய்யும் சேவை இறைவனால் விரும்பி ஏற்கப்படுகின்றது.

09. எமது சமயத்தோடு கலைகள் இரண்டறக் கலந்தவை என்பதை உதாரணம் தந்து விளக்குக.

ॐ நமது சமயம் போற்றும் கலை அனைத்திலும் பக்தியும் தர்மமும் இணைந்தே உள்ளன. உதாரணமாக நமது வீட்டு வாசலில் போடப்படும் மாக்கோலம் அழகுக் கலையாகவும் எறும்பு முதலான வாயில்லாப் பூச்சிகளுக்கு உணவளிக்கும் அறமாக விளங்குகின்றதைக் கூறலாம்.

10. கல்வி பற்றித் திருவள்ளுவர் கூறும் கருத்தை விளக்குக.

ॐ கல்வியின் பயன் உயர்ந்த தொழில்களையும் செல்வத்தையும் ஈட்டுவது மாத்திரம் அல்ல. பணிவையும் பிற உயர் பண்புகளையும் தராத கல்வியால் பயன் இல்லை. இறையுணர்வை ஏற்படுத்தாத கல்வியால் எந்தப் பயனும் இல்லை என்கின்றார் திருவள்ளுவர். இதனைப் பின்வருமாறு கூறுகின்றார்.

''கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழா அர் எனின்''

## 03. சைவ விழுமியங்கள்

01. சைவ விழுமியம் என்றால் என்ன?
ௐ சைவசமயம் வலியுறுத்துகின்ற மேலான பண்புகள் - குணங்கள் எனலாம்.

02. சைவ விழுமியங்களுள் மூன்றினைக் குறிப்பிடுக.
ௐ அன்புடைமை, வாய்மை, பணிவுடைமை

03. அன்புக்கும் அருளுக்கும் இடையிலான தொடர்பு யாது?
ௐ எல்லோரிடமும் காட்டும் ஈடுபாடு அன்பு ஆகும். அப்படிக் காட்டும் அக்கறையே அருள் எனப்படும். அருள் என்பது அன்பின் முதிர்ச்சி ஆகும்.

04. திருமூலரின் கருத்துப்படி தெய்வநிலை எய்துபவர் யார்?
ௐ உயிர்களிடத்தில் அன்பு வைப்பவன் தெய்வநிலையை எய்துவான்.

05. திருவள்ளுவரின் கருத்துப்படி இந்த உடல் எமக்குக் கிடைத்தது எதற்காக?
ௐ ஒருவரோடு ஒருவர் அன்பு பாராட்டுவதற்காகவே எலும்பு, தசை, தோல் முதலானவற்றோடு கூடிய இந்த உடம்பு எமக்குக் கிடைத்தது.

06. பாரதியார் கூறும் தவம் யாது? அதனால் ஏற்படும் பயன் யாது?
ௐ பிறரிடம் அன்பு காட்டுதலே உயர்ந்த தவமாகும்.
ௐ இன்பம் தானாகவே வந்து சேரும்

07. வாய்மை என்பதற்கு வள்ளுவர் கூறும் வரைவிலக்கணம் யாது?
ௐ யாருக்கும் எவ்வகையிலும் தீமை பயக்காதவற்றைப் பேசுவதே வாய்மை என்கிறார்.

08. பொய்மையும் எப்போது வாய்மையாகும்?
ௐ ஒரு பொய்யினால் நன்மையுண்டாகுமாக இருந்தால் அந்தப் பொய்யும் வாய்மையாகும். ஆனால் அது சுயநலமற்றதாக குற்றம் அற்றதாக இருக்க வேண்டும்.

09. ஒருவர் அகத்தூய்மை உடையவர் என்பதற்கு அத்தாட்சியாக அமைவது எது?
ௐ ஒருவர் பேசும் வார்த்தைகள் அதனை வெளிப்படுத்தும்.

10. தவம், தானம் என்பவற்றைச் செய்பவர்களை விட உயர்ந்தவராக வள்ளுவர் யாரைக் கருதுகின்றார்?
ௐ உண்மை பேசுபவர்களை

## 04. காலக் கணிப்பு

01. கால அலகுகள் எவை?
 ॐ ஆண்டு, மாதம், கிழமை, நாள்

02. காலக் கணிப்புக்கு உதவுபவை எவை?
 ॐ சந்திரன், சூரியன்

03. சந்திரமானம் என்பது யாது?
 ॐ சந்திரனை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடும் முறை சந்திரமானம் எனப்படும்.

04. சூரியமானம் என்பது யாது?
 ॐ சூரியனை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடும் முறை சௌரமானம் அல்லது சூரியமானம் ஆகும்.

05. சந்திரமானம் கணிப்பீடு எத்தனை வகைப்படும்? அவை எவை?
 ॐ 02 வகைப்படும்
 ॐ பூர்ணிமாந்த முறை (பூர்ணிம + அந்தம்)
 ॐ அமாந்த முறை (அம + அந்தம்)

06. பண்டைத் தமிழர் மாதங்களின் பெயரை எவ்வாறு அமைத்தனர்?
 ॐ சந்திரமான நெறியில் பூர்ணிமாந்த முறையைக் கடைப்பிடித்து மாதங்களை வகுத்தனர். அதாவது நிறைமதி (பௌர்ணமி) எந்த நட்சத்திரத்துடன் சேர்ந்து நிற்கின்றதோ அந்த மாதத்தின் பெயராக அமைத்தனர்

 உ-ம் :- சித்திரை மாதம் என்பது சித்திரை நட்சத்திரத்துடன் கூடி வருதல்.

07. சூரியன் எந்த இராசியில் பிரவேசிக்கும் போது தமிழ் ஆண்டு பிறக்கிறது?
 ॐ மேட ராசியில்

08. கிழமைப் பெயர்கள் எந்த அடிப்படையில் இடப்பட்டுள்ளன?
 ॐ இராகு, கேது என்னும் 2 ஐயும் கழித்து ஏனைய 7 கிரகங்களின் அடிப்படையில் இடப்பட்டுள்ளன. இதில் முதலாவது சூரியன் கிரகம் (ஞாயிறு) என வருகின்றது.

09. இந்துக்களைப் பொறுத்த வரையில் ஒரு நாளின் எல்லை யாது?
 ॐ இந்துக்களைப் பொறுத்த வரையில் ஒரு நாள் என்பது ஒரு நாள் சூரிய உதயம் முதல் அடுத்த நாள் சூரிய உதயம் வரையான காலப்பகுதி ஒரு நாள் ஆகும்.

10. காலக் கணிப்பீடு இந்து மரபில் பெறும் முக்கியத்துவம் யாது?
 ॐ வழிபாடுகள், விரதங்கள், பண்டிகைகள், விழாக்கள் முதலியவற்றுக்கு உதவுகின்றது.

## 05. விரதங்கள்

01. எமது பிறப்பின் நோக்கம் யாது?
   ௐ இந்தப் பிறவியின் நோக்கத்தை உணர்ந்து இந்தப் பிறவியைத் தந்த இறைவனை இடையறாது வழிபட்டு முத்தியைப் பெறுவதாகும்.

02. ஆன்மாவுக்கு தனு கரண புவன போகங்களை இறைவன் எதற்காக வழங்குகின்றான்?
   ௐ ஆன்மா மெய்யறிவு பெறுவதற்கு.

03. விரதம் என்றால் என்ன?
   ௐ விரதமாவது மனம் பொறிவழிப் போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் இறைவனை மெய்யன்போடு விதிப்படி வழிபடல் ஆகும்.

04. 'தவம்' என்பதற்கு திருவள்ளுவர் கூறும் வரைவிலக்கணம் யாது?
   ௐ ''உற்ற நோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை
   அற்றே தவத்திற்கு உரு''

   ௐ அதாவது தனக்கு வரும் துன்பங்களைத் தாங்கிக் கொள்வதும் பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமையுமே தவம் என்கிறார்.

05. விரதம் அனுட்டிப்பதால் ஏற்படும் நன்மைகள் யாவை?
   ௐ நமது மனம், புத்தி முதலியன தூய்மை அடையும்.
   ௐ ஞானம் கைகூடும்.

06. புரட்டாதிச் சனி விரதம் எவ்வாறு அனுட்டிக்கப்படுகிறது?
   ௐ புரட்டாதி மாதத்தில் வரும் சனிக்கிழமையில் கொண்டாடப்படுகின்றது. இத்தினத்தில் விரதமிருந்து சனீஸ்வர பகவானுக்கு கறுப்பு அல்லது நீலப் பட்டாடை சாத்தி நீல நிற மலர்களால் அர்ச்சித்து எள்சாதம் நைவேத்தியம் செய்து வழிபடல். காகத்திற்கு உணவிடல். பின் விரதத்தை நிறைவு செய்வர்.

07. கந்தசஷ்டி விரதம் எப்போது அனுட்டிக்கப்படுகிறது?
   ௐ ஐப்பசி மாதம் அமாவாசையை அடுத்து பிரதமை முதல் (வளர்பிறைப் பிரதமை) சஷ்டி ஈறாக 6 நாட்கள் இவ்விரதம் அனுட்டிக்கப்படுகின்றது.

08. கந்தசஷ்டி விரதகாலத்தில் ஆலயங்களில் படிக்கப்படும் புராணம் யாது?
   ௐ கந்தபுராண படனம்

09. விநாயக சஷ்டி விரதம் எப்போது அனுட்டிக்கப்படுகின்றது?
   ௐ கார்த்திகை மாதத் தேய்பிறைப் பிரதமை முதல், மார்கழி மாத வளர்பிறை சஷ்டி வரையுள்ள 21 நாட்கள் அனுட்டிக்கப்படுகின்றது.

10. இவ்விரத காலத்தில் பாராயணம் செய்யப்படும் நூல் யாது?
   ௐ பிள்ளையார் கதை

# 06. தீபாவளி

01. விரதங்களும் பண்டிகைகளும் எமக்கு எதைப் புலப்படுத்துகின்றன?
- ௐ சமயம் வேறு, வாழ்வு வேறு அன்று, வாழ்க்கையோடு இணைந்ததுதான் சமயம் என்பதை எமக்குப் புலப்படுத்துகின்றன. இவை மனித வாழ்வை மேம்படுத்துகின்றது.

02. இந்துக்கள் கொண்டாடும் பண்டிகைகள் மூன்றினைக் குறிப்பிடுக.
- ௐ தைப்பொங்கல்
- ௐ வருடப் பிறப்பு
- ௐ தீபாவளி

03. விசேட நாட்களில் நாம் கைக்கொள்ளும் வழக்கங்கள் யாவை?
- ௐ நாம் வீட்டையும் சுற்றுப் புறத்தையும் தூய்மைப்படுத்தல்.
- ௐ வீட்டைக் கழுவுதல், மெழுகுதல்
- ௐ தோரணங்கள், கோலங்களால் அலங்கரித்தல்
- ௐ புதிய ஆடைகளைத் தரித்தல்
- ௐ புதிய பாத்திரங்களில் சமைத்தல்
- ௐ விருந்தினருடன் கூடி உண்ணுதல்

04. தீபாவளி என்பதன் பொருள் யாது?
- ௐ தீப + ஆவளி என்றால் தீபங்களை வரிசையாக ஏற்றி வைத்தல் என்பது பொருளாகும்.

05. தீபாவளி எப்போது கொண்டாடப்படுகின்றது?
- ௐ ஐப்பசி மாதத்திலே கிருஷ்ண பட்ச (தேய்பிறை) சதுர்த்தசி தினத்தில் தீபாவளி கொண்டாடப்படுகின்றது.

06. தீபாவளி எவ்வாறு கொண்டாடப்படுகிறது?
- ௐ தீபாவளி தினத்தில் அதிகாலையில் எழுந்து, எண்ணெய் வைத்து, நீராடி புதிய ஆடைகள் அணிந்து, இறைவனை வணங்கி சுவையான உணவுகளை உற்றார் உறவினருடன் கூடி மகிழ்கின்றோம். ஒவ்வொருவரும் ஞானமாகிய ஒளியை அடைவது தான் தீபாவளியின் தத்துவமாகும்.

07. அசுரர், தேவர் என உருவகிக்கப்படுவன யாவை?
- ௐ அசுரர் - மனிதனது மனதுக்குள் உள்ள தீய எண்ணங்கள்
- ௐ தேவர் - நல்ல எண்ணங்கள்

08. தீபாவளி உணர்த்தும் தத்துவம் யாது?
- ௐ ஒவ்வொருவரும் ஞானமாகிய ஒளியை அடைவதுதான் தீபாவளியின் தத்துவமாகும்.
- ௐ விஷ்ணு பகவான் நரகாசூரனை அழித்த தினம் தீபாவளியாகும் என ஒரு புராணம் குறிப்பிடுகின்றது.

## 07. திருமணச் சடங்கு

01. பூர்வ கிரியை, அபரக் கிரியை என்பவற்றுக்கு இடையிலான வேறுபாடு யாது?
- ௐ பூர்வக் கிரியை – பிறப்பு முதல் இறப்பு வரை இடம்பெறும் சடங்குகள்
- ௐ அபரக் கிரியை - இறப்பிற்குப் பின்னர் இடம்பெறும் சடங்குகள் அபரக் கிரியை ஆகும்.

02. பூர்வ கிரியைக்கும், அபரக் கிரியைக்கும் மும்மூன்று உதாரணம் தருக.

| பூர்வக் கிரியை | அபரக் கிரியை |
|---|---|
| அன்னப் பிராசனம் | ஈமக் கிரியை |
| வித்தியாரம்பம் | சபிண்டீகரம் |
| திருமணம் | சிரார்த்தம் |

03. திருமணத்தை ஒட்டிய பூர்வாங்க சம்பிரதாயங்கள் எவை?
- ௐ திருமணப் பொருத்தம் உறுதியானதும் பெண் வீட்டார் மணமகன் வீட்டுக்கும் மணமகன் வீட்டார் பெண் வீட்டுக்கும் மங்கலப் பொருட்களுடன் சென்று திருமணத்தை நிச்சயம் செய்வர். தொடர்ந்து நடைபெறும் பொன்னுருக்கு வைபவம் ஆசாரி ஒருவரால் பொன்னுருக்கல் செய்யப்படும். மணமக்கள் வீடுகளில் கன்னிக்கால் நடுவர். இருவீட்டார் வளவுகளிலும் ஈசான மூலையில் பெரியோர்களால் முள் முருக்கை மரம் நட்டு நவதானியம் இடப்படும்.

04. திருமணக் கிரியையில் இடம்பெறும் முக்கிய அம்சங்கள் யாவை?
- ௐ மங்கல நீராட்டுதல்
- ௐ காப்புக் கட்டுதல்
- ௐ கன்னிகாதானம்
- ௐ மங்கல நாண் பூட்டுதல்
- ௐ மாலை மாற்றுதல்
- ௐ அக்கினி வலம் வருதல்
- ௐ அம்மி மிதித்தல்
- ௐ அருந்ததி பார்த்தல்

05. மங்கல நாண் பூட்டிய பின் மணமகள் மணமகனின் இடது புறம் அமர்வதன் காரணம் யாது?
- ௐ சிவன் தனது இடப்பாகத்தை சக்திக்கும் கொடுத்துள்ளார் என்ற தத்துவத்தின் அடிப்படையிலேதான் தாலி கட்டிய பின் மணமகளை மணமகனின் இடது பக்கமாக அமரச் செய்கின்றார்கள்.

06. கன்னிகாதானம் எனப்படுவது யாது?
- ௐ மணமகளின் பெற்றோர் தம் மகளை மணமகனிடம் ஒப்படைக்கும் சடங்கு கன்னிகாதானம் ஆகும்.

07. அக்கினியைச் சுற்றி மணமக்கள் வலம் வருவதற்கான காரணம் யாது?
- ௐ அக்கினியைச் சாட்சியாகக் கைப்பிடித்தல் என்பதை உணர்த்தும் முகமாக மணமகன் மணமகளின் கையைப் பிடித்த படியாக அக்கினியை 03 முறை வலம் வருவர்.

08. அருந்ததி பார்த்தல் ஏன் இடம்பெறுகிறது?
- ௐ வசிட்டமாமுனிவரின் மனைவியான நட்சத்திரமாக ஒளிர்ந்து கொண்டிருக்கும் அருந்ததியை வணங்கி இல்லறம் சிறக்க வேண்டும் என்று வேண்டுவதற்காகவாகும்.

09. மணமகனின் கையில் காப்புக் கட்டுவதன் நோக்கம் என்ன?
- ௐ எடுத்த காரிய தடையின்றி நிறைவேற விநாயகரை வழிபாடு செய்து மணமகனின் கையில் காப்புக் கட்டுவர்.

# 08. வேதங்கள்

01. சண்மதம் என்றால் என்ன? சண்மதங்கள் யாவை?
   ௐ இந்து சமயத்தின் ஆறு சமயப் பிரிவுகளையும் சண்மதம் என்று அழைப்பர்.

| | |
|---|---|
| சைவம் | சிவ பெருமான் |
| சாக்தம் | சக்தி |
| வைஷ்ணவம் | விஷ்ணு |
| காணபத்தியம் | கணபதி |
| கௌமாரம் | முருகன் |
| சௌரம் | சூரியன் |

02. இந்து சமயத்தின் முதனூல்கள் எவை? அவை பொது நூல், சிறப்பு நூல் எனப் பெயர் பெறுவதற்கான காரணம் யாது?
   ௐ வேதங்களும், ஆகமங்களும்
   ௐ வேதங்கள் இந்து சமயத்தின் உட் பிரிவுகள் அனைத்துக்கும் பொதுவானவை. அதனால் வேதங்கள் பொது நூல் எனவும் அழைக்கப்பட்டது. ஆனால் ஆகமங்கள் அவ்வாறன்றி சைவம் முதலான உட்புரிவு ஒவ்வொன்றுக்கும் வேறுவேறாக அமைபவை அதனால் அவை சிறப்பு நூல் என வழங்கப்படுகின்றது.

03. வேதம் என்பதன் பொருள் யாது?
   ௐ அறிவு

04. வேதங்கள் சுருதி எனவும் எழுதாமறை எனவும், அபௌர்ஷேயம் எனவும் பெயர் பெறுவதற்கான காரணம் யாது?
   ௐ சுருதி – காதால் கேட்கப்படுவது என்று பொருள்
   ௐ எழுதாமறை – செவிவழியாகப் பேணி வந்தமை
   ௐ அபௌர்ஷேயம் - வேதங்கள் இறைவனால் படைக்கப்பட்டவை மனிதனால் படைக்கப்படாதவை என்பதால்

05. நான்கு வேதங்களும் எவை?
   ௐ இருக்கு வேதம்
   ௐ யசுர் வேதம்
   ௐ சாம வேதம்
   ௐ அதர்வண வேதம்

06. இருக்கு வேதம் புகழ்ந்துரைக்கும் தெய்வங்கள் யாவை?
   ௐ அக்கினி, இந்திரன், சூரியன், உருத்திரன், வாயு, வருணன், பிருதுவி, உஷை

07. யசுர் வேதத்தின் உள்ளடக்கம் எத்தகையது?
   ௐ வேள்வியில் ஓத வேண்டிய மந்திரங்களையும் கிரியைகளையும் ஆற்ற வேண்டிய முறை பற்றிய விளக்கங்களையும் கொண்டதாக அமைகின்றது.

08. மந்திரங்களின் தொகுப்பாக அமைந்தது எது?
   ௐ சங்கிதை

09. வேதங்களின் நான்கு பகுதிகளும் எவை?

- ௐ மந்திரங்கள்
- ௐ பிராமணங்கள்
- ௐ ஆரணியகங்கள்
- ௐ உபநிடதங்கள்

10. வேதங்களின் மூன்று காண்டங்களும் யாவை?

- ௐ கர்ம காண்டம்
- ௐ உபாசனா காண்டம்
- ௐ ஞான காண்டம்

| | |
|---|---|
| மந்திரங்கள் | தெய்வங்களை நோக்கிப் பாடும் துதிப்பாடல்கள் ஆகும். தெய்வங்களிடம் இம்மை, மறுமை இன்பங்களை வேண்டுவனவாக அவை அமைகின்றன. |
| பிராமணங்கள் | யாகங்களின் போது மேற்கொள்ள வேண்டிய சடங்கு முறைகளை விளக்குவன. |
| ஆரணியங்கள் | சடங்குகள் பற்றிய தத்துவ விளக்கங்களை உருவகக் கதை வடிவில் எடுத்துரைப்பன. |
| உபநிடதங்கள் | வேதங்களின் இறுதிப் பகுதியாக அமைவன. வேதங்களில் கூறப்படுகின்ற உண்மைகளின் முடிவாக விளங்குவதால் ''வேதாந்தம்'' என்றும் சுட்டப்படுகின்றன. |

## 09. திருமுறைகள்

**I)**

01. திருமுறை என்பதன் பொருள் யாது?
   - ௐ சிவபெருமானுடைய பெருமைகளைப் பேசும் அருட் பாடல்களின் தொகுப்பு திருமுறை எனப்படும்.

02. திருமுறைகளைத் தொகுத்தவர் யார்? தொகுப்பித்தவர் யார்?
   - ௐ தொகுத்தவர் - நம்பியாண்டார் நம்பி
   - ௐ தொகுப்பித்தவர் - இராஜராஜ சோழன்

03. "உற்றுமை சேர்வது.." எனும் தேவாரத்தில் இறைவனின் சிறப்பு எவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது?
   - ௐ உமாதேவியார் பிரியாது சேர்ந்திருப்பது உனது திருமேனியையே. ஞானிகள் உணர்வதும் உனது மெய்மையையே. கற்று உணர்ந்த துறவிகள் வெறுப்பது சிற்றின்பங்களையே. கனல் வீசுகின்ற உனது நெற்றிக் கண் எரித்தது மன்மதனையே. உனது மானத்தை மறைப்பது பாம்பே. தேவர்கள் செய்வது உனது தொண்டினையே. நீ பெற்று அணைத்தது முருகனையே அத்தகைய நீ பிரம புரமபுரத்தை விரும்பி உறைகின்றாய்.

04. 'பிரமபுரம்' வேறு எப்பெயர்களால் அழைக்கப்படுகின்றது?
   - ௐ சீர்காழி

**II)**

01. அப்பர் பெருமான் சிதம்பரத்தில் இறைவனது எக்கோலத்தை தரிசித்து மகிழ்ந்தார்?
   - ௐ நடராசப் பெருமானின் அருட்கோலத்தை

02. அக் கோலத்தினை அப்பர் பெருமான் எவ்வாறு வருணித்துப் பாடியுள்ளார்?
   - ௐ வளைந்த புருவங்களையும் கொவ்வைப் பழம் போன்ற வாயில் புன்சிரிப்பினையும் குளிர்ச்சியான சடையினையும், பவளம் போன்ற மேனியில் பால் போன்ற வெண்ணீற்றையும், பேரின்பத்தைத் தருகின்றதும் பொன் மயமானதுமான தூக்கிய திருவடியையும் காணும் பேறு கிடைத்தால் (வேண்டாம் என ஒதுக்கத்தக்க) மனிதப் பிறவியும் வேண்டியதேயாகும்)

03. சமணர்கள் அப்பர் பெருமான் மீது கோபமுற்றமைக்கான காரணம் யாது?
   - ௐ சமண சமயத்திலிருந்து மீண்டும் சைவ சமயத்திற்கு மாறியமையாகும்.

04. அப்பர் பெருமான், அரசனின் அழைப்பை எவ்வாறு மறுத்துரைத்தார்?
   - ௐ நாம் யாருக்கும் அடிமை அல்லர். இயமனுக்கும் அஞ்சமாட்டோம், நரகத் துன்பமும் எமக்கு இல்லை வேறு துன்பங்களும் எமக்கு இல்லை. என்றும் மகிழ்ந்திருப்போம். பிணி அறியோம். யாருக்கும் பணியமாட்டோம், எமக்கு எக்காலத்திலும் இன்பமே அன்றித் துன்பம் இல்லை. தாம் யாருக்கும் கீழ்படாத தன்மையரும் அடியார்களுக்கு சுகத்தைச் செய்பவரும் (சங்கரனும்) தனது ஒரு காதிலே குழை அணிந்தவருமாகிய அத்தலைவருக்கே நாம் மீளா அடிமையானோம் என்று கூறினார்.

## III)

01. சுந்தரர் கண்பார்வையை இழந்தமைக்கான காரணம் யாது?
    - ௐ சத்தியத்தை மீறியமை.

02. **"**அந்தணாளனும்**…"** என்ற தேவாரம் எத்தலத்தின் மீது பாடப்பட்டது?
    - ௐ திருப்புன்கூர்

03. இத் தேவாரத்தில் இடம்பெறும் புராணக் கதை எது?
    - ௐ மார்க்கண்டேயன் என்னும் அந்தணனின் உயிரை இயமனிடம் இருந்து காப்பாற்றியமை.

04. சுந்தரர் தமது கண் பார்வையை மீளப் பெற்றுக் கொண்ட தலங்களைக் குறிப்பிடுக.
    - ௐ இடக் கண் - திருவேகமச்சம்
    - ௐ வலக் கண் - திருவாரூர்

05. **"**மீளா அடிமை..**"** எனும் தேவாரத்தில் அடியார்கள் படும் துன்பம் எவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது?
    - ௐ பிறர் எவரையும் நாடாது உமக்கே நிரந்தர அடிமை பூண்டு ஆட்பட்டிருக்கும் அடியவர்கள், மூண்டு எரியாத நெருப்புப் போல (வெளிப்படக் காட்டாது) உள்ளே மனம் வருத்தி, மிகவும் முகம்வாடி தங்கள் துன்பத்தை எடுத்துரைக்கும் போது (அதற்குப் பரிகாரமாக) எதுவும் செய்யாது இருப்பவரே! நீர் நன்கு வாழ்ந்து போவீராக! எனக் கூறுகின்றார்.

## IV)

**01.** **"**பால் நினைந்தூட்டும்..**"** என்ற திருவாசகம் இடம்பெறும் பதிகம் யாது?
- ௐ பிடித்த பத்து

**02.** அப்பதிகம் அப்பெயர் பெற்றமைக்கான காரணம் யாது?
- ௐ இறைவனைச் சிக்கெனப் பற்றிப் பிடித்தமையைக் கூறும் பாடல்கள் பத்தினைக் கொண்டமைந்ததாலாகும்.

**03.** இறைவனது கருணைத் திறத்தை எடுத்துரைக்கும் அடி எது?
- ௐ ''பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்''

**04.** **"**சங்கரா ஆர்கொலோ சதுரர்**"** என்ற தொடரை விளக்குக.
- ௐ ஈசனே உன்னை எனக்குத் தந்தால் (அதற்குப் பதிலாக) என்னை உன்னுடையவனாக்கிக் கொண்டாய் (இந்தக் கொள்ளல் கொடுத்தலில்) யார் கெட்டிக்காரர் (நானே!)

**05.** மணிவாசகர் இவ்வாறு கேட்டமைக்கான காரணம் யாது?
- ௐ சிவனிடம் வைத்த மாறாத அன்பு

## V)

01. திருவிசைப்பா பாடியோர் எத்தனை பேர்?
ॐ 09 பேர்

02. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு - இரண்டையும் பாடியவரின் பெயரைக் குறிப்பிடுக.
ॐ சேந்தனார்

03. சேந்தனார், இறைவனை எவ்வாறெல்லாம் உருவகித்துப் பாடியுள்ளார்?
ॐ ஞான நூல்களைக் கற்றறிந்தவர்கள் பேராவலோடு விழுங்கும் கற்பகக் கனியாக இருப்பவர்.
ॐ எல்லையில்லாத பெரும் கருணைக் கடலானவர்.
ॐ மெய்ஞ்ஞான நூல்களைக் கல்லாதவர்கள் அல்லது பிறர் அறிந்து கொள்ள முடியாத மாணிக்க மாலை போன்றவர்.
ॐ மதித்து வழிபடுபவர்களது மனதில் தூண்டாமணி விளக்குப் போல் பிரகாசிப்பவர்.
ॐ கோபித்தவர்களது (அசுரர்களது) முப்புரங்களையும் அழித்தவர்.

04. இறைவன் பாற்கடலை அளித்தமைக்கான காரணம் யாது?
ॐ (வியாக்கிரபாதர் என்னும் முனிவரது மகனான உபமன்யு என்னும்) பாலகன் பால் வேண்டி அழுதமை ஆகும்.

05. "பாலுக்குப் பாலகன்" என்னும் திருப்பல்லாண்டுப் பாடலில் சிற்றம்பலம் எவ்வாறு சிறப்பிக்கப்படுகிறது?
ॐ நிலைபெற்ற தில்லை என்னும் திருப்பதியில் வேதங்களை இடையறாது ஓதுகின்ற அந்தணர்கள் வாழ்கின்ற இடமே தில்லைச்சிற்றம்பலமாகும்.

## VI)

01. திருமந்திரப் பாடல் விளக்கி நிற்கும் புண்ணியச் செயல்கள் எவை?
ॐ இறைவனுக்கு ஒரு பச்சிலை இட்டு அவரை வணங்குதல் யாவருக்கும் இலகுவாசகச் செய்யக்கூடிய புண்ணியச் செயலாகும்.
ॐ பசுவுக்கு ஒருபிடி புல்லைக் கொடுத்தல் யாவரும் செய்யக்கூடிய நற்செயலாகும்.
ॐ பசித்து வந்தோருக்கு இன்னார், இனியார் என்று பாராமல் ஒரு பிடி உணவு கொடுத்தல் யாவரும் இலகுவாகச் செய்யக்கூடிய நற்செயலாகும்.
ॐ பிறருடன் இனிய வார்த்தைகளைப் பேசுதல் யாவரும் இலகுவாகச் செய்யக்கூடிய நற்செயலாகும்.

02. பதினோராம் திருமுறையுள் அடங்கும் நூல்கள் மூன்றினைக் குறிப்பிடுக.
ॐ திருமுருகாற்றுப் படை
ॐ திருவாலங்காட்டுத் திருப்பதிகங்கள்
ॐ பொன்வண்ணத்தந்தாதி
ॐ திருத்தொண்டர் திருவந்தாதி – முதலான 40 பிரபந்தங்கள்

03. விநாயகரைப் பணிவதால் கிட்டும் நன்மைகள் எவை?
ॐ நாம் செய்த கொடிய வினையின் பயனை அடியோடு போக்கலாம்.
ॐ விநாயகனே எம்மிடமுள்ள ஆசைகளைத் தீர்க்க வல்லவன்.

04. அடியார் வரலாற்றை விரித்துரைக்கும் நூல் எது?
ॐ பெரிய புராணம்

05. தண்ணளி வெண்குடை வேந்தன் யார்? அவனது எச்செயல் இங்கு போற்றப்பட்டுள்ளது?
ॐ மனுநீதிகண்ட சோழன்
ॐ மனுநீதிகண்ட சோழனின் நீதித் திறம் இங்கு போற்றப்படுகின்றது.

## 10. திருக்கூட்டச் சிறப்பு

01. திருக்கூட்டச் சிறப்பு என்றால் என்ன?
   ௐ சிவனடியார்கள்

02. தேவாசிரியரின் மண்டபம் எங்கே உள்ளது?
   ௐ திருவாரூர்

03. சிவனடியார்களின் தோற்றப் பொலிவை சுருக்கமாக விளக்குக.
   ௐ மாசு இல்லாத அழகிய திருமேனியில் பூசுகின்ற வெண்ணீறு போன்று உள்ளமும் தூய்மையானவர்கள். தங்களது அருளொளியால் எல்லாத் திக்கிலும் உண்மை ஒளி பிரகாசிக்கும்படி செய்தவர்கள் இவர்கள் எம்மால் எடுத்துரைக்க முடியாத பெருமையுடையவர்கள்.

04. சிவனடியார்களின் சிறந்த பண்புகளை பட்டியற்படுத்துக.
   ௐ மண், நீர், நெருப்பு, காற்று, வானம் எனும் ஐந்தும் தமது முன்னைய நிலை கெட்டுக் கலங்கினாலும் உமையம்மையை ஒரு பாகத்திற் கொண்டவரான பெருமானின் மலர்போலும் திருவடிகளை மறவாதவர்கள்.
   ௐ புகழ்ந்துரைக்கப்படுகின்ற அன்பு நெறியிலே உறுதியோடு நிற்பவர்கள்.
   ௐ எத்தன்மையான குறைபாடுமில்லாத நற்குணமாகிய பெருமலையை ஒத்தவர்கள்.
   ௐ அழிதலும் வளர்த்தலும் அற்ற நிலையான செல்வம் உடையவர்கள்.
   ௐ உடைந்த மட்பானையின் ஓட்டையும் பொன்னையும் ஒன்றாகவே மதிப்பவர்கள்.
   ௐ இறைவனை கும்பிடுதலேயன்றி முத்தியின்பமாகிய வீடுபேற்றுக்கும் ஆசைப்படாத வீரம் உடையவர்கள்.
   ௐ அவர்களுக்கு மாலை உருத்திராக்கமே; ஆடை கந்தைத் துணியே
   ௐ பொறுப்பு வாய்ந்த கடமை இறைவனது தொண்டு மட்டுமே

05. தேவாசிரியரின் மண்டபச் சிறப்பை எடுத்துரைக்க.
   ௐ பூதங்கட்கெல்லாம் நாயகரும், திருவாரூரில் **புற்றின்** மீது பேரொளி வடிவாய் வீற்றிருப்பவரும் ஆதி தேவனுமாகிய எம் பெருமானது கோயிலில் ஒளிபரப்பும் பெருமணிகளின் நீண்ட சுடருடன் பிரகாசிக்கும் திருமுற்றத்தினைச் சூழ்ந்து விளங்கும் பழமை வாய்ந்த மதிற்புறத்து முன்னாக உள்ளது ஓர் **மண்டபம்** அதுதான் தாமரைப் பூமீது விளங்கும் பிரமன், இந்திரன் தாமரைப்பூ மேல் இருக்கும்
   இலக்குமி வாழும் மார்பினையுடைய திருமால் முதலான தேவர்கள் எல்லோரும் நிறைந்து தங்கியிருப்பது தேவாசிரியன் என்னும் அந்தத் திருமண்டபம் ஆகும்.

06. திருத்தொண்டர் தொகை என்னும் பதிகம் யாரால் பாடப்பட்டது?
   ௐ சுந்தரமூர்த்தி நாயனார்

07. தேவாசிரிய மண்டபம் ஆயிரம் பாற் கடல்போல ஒளிவீசியதன் காரணம் யாது?
   ௐ எல்லாத் துயரையும் போக்கவல்ல அடியார்கள் **தங்கள்** மேனிமேல் நிறையப் பூசிய திருநீற்றின் ஒளியாலும் நிறைகின்ற அகத் தூய்மையாலும் எதனையும் காக்கவல்ல ஐந்தெழுத்தின் ஓசை அம்மண்டபத்தில் பொலிதலாலும் அந்த தேவாசிரியர் மண்டபம் ஒன்றாய்ப் பரந்து விளங்கும் ஆயிரம் பாற்கடல் போன்று விளங்குகின்றது.

08. அது அகில உலகமும் போல் தோற்றமளிப்பதன் காரணம் யாது?
   ௐ தேவாசிரிய மண்டபத்தில் இருக்கின்ற அடியார்களை தரிசித்ததற்காக அகில உலகத்திலும் இருப்பவர்கள் வந்தடைவதால் அகில உலகமும் போன்று விளங்குகின்றது.

## 11. திலகவதியார்

01. திலகவதியாரின் தாய், தந்தையர் பெயர்கள் யாது?
   ௐ தாய் - மாதினியார்
   ௐ தந்தை – புகழனார்

02. திலகவதியார் உயிர்விடத் துணிந்தது ஏன்?
   ௐ பெற்றோர்களால் தனது கணவனாக நிச்சயிக்கப்பட்ட கலிப்பகையார் இறந்த பின் தனக்கு இனி வேறு வாழ்க்கை இல்லை என்று முடிவெடுத்தார். இதனால் தானும் உயிர் விடத் துணிந்தார்.

03. திலகவதியார் தவ வாழ்க்கையை ஏன் மேற்கொண்டார்?
   ௐ தம்பி வாழ வேண்டும் (திருநாவுக்கரசர்) அதற்காக தாமும் வாழ வேண்டும் என முடிவெடுத்து உலக இன்பங்களையெல்லாம் துறந்து இல்லறத்திலேயே துறவறம் மேற்கொண்டு தவ வாழ்க்கையை வாழ்ந்தார்.

04. மருணீக்கியார் தருமசேனர் எனப் பெயர் பெற்றதன் காரணம் யாது?
   ௐ பாடலிபுரம் என்ற இடத்திலே அமைந்த சமணப் பள்ளியை அடைந்து, சமண நூல்களையெல்லாம் கற்றுத் தேர்ந்து இறுதியில் அவர்களுக்கெல்லாம் மேலாக தருமசேனர் என்ற பெயரைப் பெற்றார்.

05. தருமசேனர் திருவதிகைக்கு ஏன் வரவேண்டி நேரிட்டது?
   ௐ தருமசேனருக்கு ஏற்பட்ட சூலை நோயை சமணர்களால் பரிகாரம் செய்ய முடியாது போக தமக்கையாரின் (திலகவதியார்) இடமான திருவதிகைக்குச் சென்றார்.

06. தருமசேனரின் (அப்பரின்) சூலை நோய் எவ்வாறு நீங்கியது?
   ௐ ''கூற்றாயினவாறு விலக்ககலீர்'' எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடி இறைஞ்சினார். அப்போது சூலை நோய் அகன்றது.

07. திலகவதியாரின் சைவசமயத்திற் கொண்ட பற்றுறுதி எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது?
   ௐ சைவத்திலிருந்து சமண சமயத்திற்கு மாறிய தனது தம்பியை சைவத்திற்கு மாற்றியமை. தீராத சிவனின் திருப்பணிகளை மேற்கொண்டமை. திருவதிகை மடத்திலே தங்கியிருந்து திருத்தொண்டு புரிந்தமை.

## 12. திருக்கோயிலும் திருவிழாவும்

01. கோயில்களில் தினமும் நடைபெறும் பூசைகள் எவை?
- ௐ உஷக்காலப் பூசை
- ௐ காலைச் சந்திப் பூசை
- ௐ உச்சிக் காலப் பூசை
- ௐ சாயங்காலப் பூசை
- ௐ இரண்டாங்காலப் பூசை
- ௐ அர்த்த சாமப்பூசை

02. மகோற்சவம் எவற்றை உணர்த்துகிறது?
- ௐ இறைவனின் ஐந்தொழில்களை உணர்த்துகின்றது.

03. மகோற்சவத்தின் ஆரம்பத்தில் இடம்பெறும் கிரியைகள் யாவை?
- ௐ கிராமசாந்தி
- ௐ வாஸ்து சாந்தி
- ௐ இரட்சாபந்தனம்

04. கொடியேற்றம் எதனை உணர்த்துகிறது?
- ௐ ஆணவம் வலியிழந்து ஆன்மா மல நீக்கம் பொருட்டு திருவருளாகிய கொடியை ஏற்றுவதையே உணர்த்தி நிற்கிறது.

05. கொடிமரம், கயிறு, கொடிச்சீலை என்பன எவற்றைக் குறிக்கின்றன?
- ௐ கொடிமரம் - பதி
- ௐ கயிறு – பாசம்
- ௐ கொடிச்சீலை – பசு

06. நைமித்திய பூசைகள் ஏன் இடம்பெறுகின்றது?
- ௐ நித்திய பூசைகளிலே ஏற்படுங் குறைபாடுகளை நைமித்திய பூசையாகிய திருவிழாக்கள் தீர்க்கின்றன.

07. மகோற்சவங்களால் விளையும் நன்மைகள் யாவை?
- ௐ ஊர் மக்களை ஒன்று சேர்க்கின்றன.
- ௐ ஐம்புலன்களுக்கும் விருந்தளிக்கின்றன.
- ௐ மக்கள் மனதில் நற்பண்புகளை வளர்க்கின்றன.

## 13. சமய குரவர்

01. திருஞானசம்பந்தர், ஆளுடைய பிள்ளையார் என்ற பெயர்களின் பொருளை விளக்குக.
- ॐ திருஞானசம்பந்தர் - சிவஞான சம்பந்தம் பெற்றமையால் திருஞானசம்பந்தர் எனப் பெயர் பெற்றார்.
- ॐ ஆளுடைய பிள்ளையார் - இறைவனால் ஆட்கொள்ளப்பட்டமையால் ஆளுடைய பிள்ளையார் எனப்பட்டார்.

02. ஆளுடைய பிள்ளையார் பாடிய பதிகங்களை யாழில் அமைத்துப் பாடியவர் யார்?
- ॐ திருநீலகண்டப் பெரும்பாணர்

03. பிள்ளையாருக்கு (சம்பந்தருக்கு) பொற்றாளம், முத்துக்குடை, முத்துச்சிவிகை கிடைத்தமைக்கான காரணம் யாது?
- ॐ தந்தையாரின் தோளில் இருந்து இறங்கி தாமே திருவரத்துறையை வணங்குவதற்கு நடந்து சென்றார். இதனை அறிந்த இறைவன் (அரத்துறைநாதர்) அந்தணர்களின் கனவில் தோன்றிக் கூறியது.

04. யாழ்முரிப்பதிகம் பாடியதன் காரணம் யாது?
- ॐ அதாவது பாணர் பிள்ளையாரை நோக்கி "சுவாமி தங்கள் திருப்பதிக இசை அளவு பாடாத அரிய தன்மையுடையது என்பதனை எல்லோரும் அறிய ஒரு திருப்பதிகம் பாடவேண்டும்" என்று கேட்டதற்கிணங்க "மாதர் மடப்பிடியும்" என்ற பதிகம் பாடப்பட்டது.

05. சம்பந்தப் பெருமான் மதுரையில் நிகழ்த்திய அற்புதங்கள் யாவை?
- ॐ சமணர்கள் தங்களின் எதிர்ப்பை வெளிப்படுத்த சம்பந்தர் தங்கியிருந்த மடத்திற்கு தீ வைத்தமை. அதனை "செய்யனே திருவாலவாய்" என்ற பதிகம் பாடி தீயைத் தணித்தார்.
- ॐ பாண்டிய மன்னனின் வெப்பு நோயைத் தீர்த்தமை.
- ॐ சமணர்களுடனான அனல்வாதம், புனல்வாதம் என்பவற்றில் வெற்றி பெற்றமை.

06. சம்பந்தப் பெருமான் எங்கிருந்தவாறு ஈழநாட்டுத் திருத்தலங்கள் மேல் திருப்பதிகம் பாடினார்?
- ॐ இராமேஸ்வரம்

07. "காதலாகிக் கசிந்து" என்ற தேவாரம் பாடப்பெற்ற சந்தர்ப்பத்தை விளக்குக.
- ॐ சம்பந்தப் பெருமானின் திருமணத்தில் சோதி ஒன்று தோன்றியது. அப்பொழுது காதலாகிக் கசிந்து எனும் பஞ்சாட்சரப் பதிகத்தை ஓதினார்.

08. நாவுக்கரசர் உழவாரப் படையாளி என அழைக்கப்பட்டதன் காரணம் யாது?
- ॐ அவர் தம் கையில் வைத்திருக்கும் உழவாரத்தினால் கோயிற் சுற்றுப் புறத்தைச் சுத்தம் செய்வார். அதனால் அவர் உழவாரப் படையாளி என்று அழைக்கப்பட்டார்.

09. திருத்தூங்கானை மாடத்தில் நாவுக்கரசருக்கு நிகழ்ந்த அற்புதம் யாது?
- ॐ இறைவன் அருளால் சூல, இடப இலச்சினைகள் ஒருவரும் அறியாமல் நாவுக்கரசரின் தோளில் பொறிக்கப்பட்டது.

10. வடகயிலையைத் தரிசிக்கும் விருப்பு அப்பருக்கு எவ்வாறு ஏற்பட்டது?
   - ॐ அப்பர் தென்கயிலை எனப்படும் திருக்காளத்தி அப்பருக்கு வடகயிலையை நினைவூட்டியது.

11. கயிலாயக் கோலத்தை அப்பர் எங்கு கண்டு மகிழ்ந்தார்? அப்போது அவர் பாடிய தேவாரப் பதிகம் யாது?
   - ॐ திருவையாற்றில்
   - ॐ "மாதர்ப் பிறைக் கண்ணியானை…"

12. இறைவன், நாவுக்கரசரை எவ்வாறெல்லாம் சோதித்தார்?
   - ॐ நாவுக்கரசர் பூம்புகார்க் கோயிலுக்குச் சென்று, உழவாரத் தொண்டு செய்து வரும் நாளில், அவருடைய பற்றற்ற நிலையை உலகத்தார்க்குக் காட்ட இறைவன் திருவுளங்கொண்டான். எனவே அவருடைய உழவாரம் நுழையும் இடமெல்லாம் பொன்னும் மணியும் பொலிய இறைவன் அருள் செய்தான். நாவுக்கரசர் பொன்னையும் மணியையும் பருக்கைக் கற்களாகவே கண்டு அகற்றினார்.

   - ॐ பின்னர் வானுலக அரம்பையர் வந்து, அவரின் முன் ஆடல் பாடல் புரிந்து, அவருடைய மனத்தைக் கலைக்க முயன்றபோதும் அவர் தம் நிலையிலிருந்து பெயராது, "பொய்மாயப் பெருங்கடலிற் புலம்பா நின்ற" என்னும் பதிகத்தைப் பாடினார். அப்பொழுது அந்த விண்மடந்தையர் அவரைத் தொழுது அகன்றனர்.

13. நாவுக்கரசர் முதலில் பாடிய பதிகம் யாது? ஈற்றில் பாடிய பதிகம் யாது?
   - ॐ முதலில் பாடியது – "கூற்றாயினவாறு விலக்ககலீர்.."
   - ॐ ஈற்றில் பாடியது – "எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ"

## 14. சந்தானகுரவர்

01. சமயகுரவர் எனப்படுவோர் யாவர்? அவர்கள் சைவசமயத்தை எவ்வாறு வளர்த்தனர்?
- ௐ சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர்
- ௐ அன்பு வழியில் நின்று, பக்திப் பனுவல்களைப் பாடி சைவசமயத்தை வளப்படுத்தியதோடு அதன்படி வாழ்ந்தனர்.

02. சந்தான குரவர் எனப்படுவோர் யாவர்?
- ௐ அறிவு வழியாலும் இறைவனை அடையலாம் என்பதனைக் காட்டி சைவசித்தாந்தக் கருத்துக்களை விளக்கம் செய்த பெரியோர்கள் நால்வரும் சந்தான குரவர் என அழைக்கலாம்.

03. சந்தான குரவர் என்பதன் பொருள் யாது?
- ௐ சந்தானம் என்றால் பரம்பரை என்றும் குரவர் என்றால் ஞானாசிரியர் என்றும் பொருள்படும். எனவே சந்தான குரவர் என்பது தத்துவஞான பரம்பரையில் வந்த ஞானாசிரியர்களைக் குறிக்கின்றது.

04. அகச்சந்தான குரவர் யாவர்?
- ௐ திருநந்தி தேவர்
- ௐ சனற்குமார முனிவர்
- ௐ சத்திய ஞான தரிசினிகள்
- ௐ பரஞ்சோதி முனிவர்

05. புறச்சந்தான குரவர் யாவர்?
- ௐ மெய்கண்ட தேவர்
- ௐ அருணந்தி சிவாச்சாரியார்
- ௐ மறைஞான சம்பந்தர்
- ௐ உமாபதி சிவாச்சாரியார்

06. சுவேதவனப் பெருமாளுக்கு "மெய்கண்டர்" எனும் பெயர் எவ்வாறு ஏற்பட்டது?
- ௐ வான் வெளியில் சஞ்சரித்துக் கொண்டிருந்த பரஞ்சோதியார் பூவுலகில் தனது நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்த சுவேதவனப் பெருமாள் எனும் இக் குழந்தையின் பரிபக்குவத்தை உணர்ந்து உபதேசம் வழங்கி; மெய் கண்டார் எனும் தீட்சா நாமத்தை உபகரித்தார்.

07. சிவஞான போதத்தின் சிறப்பு யாது?
- ௐ சித்தாந்த முதல் நூல் என்னும் சிறப்புடையது.

08. அருணந்தி சிவாச்சாரியாரின் குருவாக விளங்கியவர் யார்?
- ௐ மெய்கண்ட தேவர்

09. அருணந்தி சிவாச்சாரியார், சகலாகம பண்டிதர் என்ற பெயர் பெற்றமைக்கான காரணம் யாது?
- ௐ இளமையிலே ஆகம நூல் அறிவு மிகவும் நிரம்பப் பெற்றவர். இதனால் சகலாகம பண்டிதர் எனும் சிறப்புப் பெயர் பெற்றார்.

10. சிவஞான போதத்தின் வழிநூல் எது?
ॐ சிவஞான சித்தியார்

11. சுபக்கம், பரபக்கம் என்பவற்றின் உள்ளடக்கம் யாது?
ॐ சுபக்கம் - சைவசித்தாந்த அடிப்படைகளை விளக்கி நிற்கும் பகுதி சுபக்கமாகும்.
ॐ பரபக்கம் - பிற சமய தத்துவங்களின் பொருந்தாமைகளைக் கண்டிக்கும் பகுதி பரபக்கமாகும்.

12. அருணந்தி சிவாச்சாரியாரால் அருளப்பெற்ற நூல்கள் எவை?
ॐ சிவஞான சித்தியார், இருபா இருப.ஃது

<table>
<tr><th colspan="4">சைவசித்தாந்த நூல்களும் ஆசிரியர்களும்</th></tr>
<tr><th></th><th>நூல்</th><th>ஆசிரியர்</th><th>காலம்</th></tr>
<tr><td>1.</td><td>திருவுந்தியார்</td><td>திருவியலூர் உய்ய வந்த தேவர்</td><td>12ம் நூற்றாண்டு</td></tr>
<tr><td>2.</td><td>திருக்களிற்றுப்படியார்</td><td>திருக்கடவூர் உய்ய வந்த தேவர்</td><td>12ம் நூற்றாண்டு</td></tr>
<tr><td>3.</td><td>சிவஞானபோதம்</td><td>மெய்கண்ட தேவர்</td><td>13ம் நூற்றாண்டு</td></tr>
<tr><td>4.</td><td>சிவஞான சித்தியார்</td><td rowspan="2">அருணந்தி சிவாச்சாரியார்</td><td rowspan="2">13ம் நூற்றாண்டு</td></tr>
<tr><td>5.</td><td>இருபா இருப.ஃது</td></tr>
<tr><td>6.</td><td>உண்மை விளக்கம்</td><td>திருவதிகை மனவாசகம் கடந்த தேவர்</td><td>13ம் நூற்றாண்டு</td></tr>
<tr><td>7.</td><td>சிவப்பிரகாசம்</td><td rowspan="8">உமாபதி சிவாச்சாரியார்<br>(சித்தாந்த அட்டகம்)</td><td rowspan="8">14ம் நூற்றாண்டு</td></tr>
<tr><td>8.</td><td>திருவருட்பயன்</td></tr>
<tr><td>9.</td><td>வினாவெண்பா</td></tr>
<tr><td>10.</td><td>கொடிக்கவி</td></tr>
<tr><td>11.</td><td>போற்றிப் ப.ஃறொடை</td></tr>
<tr><td>12.</td><td>நெஞ்சு விடுதூது</td></tr>
<tr><td>13.</td><td>உண்மை நெறிவிளக்கம்</td></tr>
<tr><td>14.</td><td>சங்கற்ப நிராகரணம்</td></tr>
</table>

# 15. திருமூலர்

01. யோகியர் எனப்படுவோர் யாவர்?
- ௐ அட்டமா சித்திகளைக் கைவரப் பெற்றோரே யோகியர் எனப்படுவர்.

02. பசுக்களின் துயர் நீக்க யோகியார் கையாண்ட உத்தி யாது?
- ௐ பசுக்கள் மேய்த்து வரும் மூலன் எனும் இடையன் ஏதோ காரணத்தினால் இறந்து கிடந்ததைக் கண்ணுற்ற பசுக்களின் துயரத்தைப் போக்க மூலனின் உடலுக்குள் உயிர் கொடுத்தார்.

03. யோகியார் திருமூலர் என்ற பெயரைப் பெற்றதற்கான காரணம் யாது?
- ௐ யோகியார் மூலன் எனும் உடலில் வாழ்ந்து வரும் ஊனுடம்பில் இருந்தபடியே பிறவித்துன்பத்தைப் போக்கி சிவன் முத்தி பெற்றமையால் திருமூலர் எனப் பெயர் பெற்றார்.

04. திருமந்திரத்தின் சிறப்புக்கள் யாவை?
- ௐ திருமூல நாயனாரால் அருளிச் செய்த திருமந்திரம், சைவத் திருமுறைகளுள் 10 ஆவதாக அமையப் பெற்றது. தோத்திர நூலாகவும், சாத்திர நூலாகவும் விளங்குவதால் இதனைத் தமிழாகமம் என்று சிறப்பிக்கப்படுகின்றது.

05. இறைவனை அடைவதற்குத் திருமூலர் கூறும் வழி யாது?
- ௐ அன்பினாலும், பக்தியினாலும் இறைவனை அடையலாம்.

06. திருமந்திரத்தின் பகுதிகள் தந்திரம் என்ற பெயரால் சுட்டப் பெறுவதன் காரணம் யாது?
- ௐ தந்திரம் என்பது ஆகமத்தைக் குறிக்கும் ஒரு சொல்லாகும். ஆகமங்களின் சாராம்சங்கள் ஒன்பது தந்திரங்களாலும் அமைந்துள்ளது.

07. திருமந்திரத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ள விடயங்கள் யாவை?
- ௐ உலக வாழ்க்கைக்குத் தேவையான ஒழுக்கங்கள்.
- ௐ உள் பொருள் பற்றிய விடயங்கள்
- ௐ ஆன்மாக்கள் இறைவனை அடைவதற்கு உதவும் மார்க்கங்கள்
- ௐ சிவ சின்னங்களின் முக்கியத்துவம்
- ௐ குருலிங்க சங்கம வழிபாடு
- ௐ முத்தி முதலான விடயங்கள் தொடர்பாக எடுத்துரைக்கின்றது.

## 16. சுவாமி விபுலானந்தர்

01. மயில்வாகனனார் துறவில் நாட்டம் கொள்ளத் தூண்டிய சம்பவம் யாது?
- ௐ சைவ சித்தாந்தப் புலமையாளரும் மயில்வாகனனாரின் நெருங்கிய நண்பருமான மு. திருவிளங்கம் அவர்களின் இறப்பு அவரது உள்ளத்தில் தீவிரமான துறவு நாட்டத்தை ஏற்படுத்தியது.

02. அவரின் ஆன்மிக வாழ்க்கைப் பயணத்துக்கு இராமகிருஷ்ண மடம் எவ்வாறு உதவியது?
- ௐ இராம கிருஷ்ண மடத்தைச் சார்ந்த துறவிகள் போதனைகள் மூலம் ஆன்மிக உணர்வை வளர்த்தார்கள்.
- ௐ ஆன்மிகப் பயிற்சிகளை வழங்கியமை.
- ௐ இராம கிருஷ்ண பமரஹம்சரின் நேரடிச் சீடர்களுள் ஒருவரான சுவாமி சிவாநந்தரால் ஞானோபதேசம் செய்து சுவாமி விபுலானந்தர் எனும் திருநாமத்தைச் சூட்டினார்.

03. சுவாமி விபுலானந்தர் ஆசிரியராகத் திகழ்ந்த பத்திரிகைகள் யாவை?
- ௐ இராம கிருஷ்ண விஜயம் எனும் தமிழ்ச் சஞ்சிகை
- ௐ வேதாந்த கேசரி என்னும் ஆங்கில மொழிச் சஞ்சிகை
- ௐ விவேகானந்தன் இதழின் ஆசிரியர்

04. சுவாமிகள் தொடர்புபட்ட பாடசாலைகளைப் பட்டியற்படுத்துக.
- ௐ கல்முனை மெதடிஸ்த ஆங்கிலப் பாடசாலை
- ௐ மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரி
- ௐ சிவாநந்த வித்தியாலயம்

05. சுவாமிகள் நாடகத்துறை சார்ந்ததும் இசைத்துறை சார்ந்தும் எழுதிய நூல்கள் யாவை?
- ௐ நாடகத்துறை – மதங்கசூளாமணி
- ௐ இசைத்துறை – யாழ் நூல்

06. மயில்வாகனனார் பல்வேறு துறைகளில் பெற்றிருந்த பாண்டித்தியம் பற்றி எடுத்துக் காட்டுக.
- ௐ நாடகத்துறை
- ௐ இசைத்துறை
- ௐ பத்திரிகைத் துறை
- ௐ சொற்பொழிவு
- ௐ பாடசாலை நிறுவுநர்
- ௐ ஆய்வாளர்

07. சுவாமிகள் விபுலானந்தரின் பிரமச்சரிய நாமம் என்ன?
- ௐ பிரபோத சைதன்யர்

## 17. இறைவனும் ஆன்மாவும்

01. சித்து, அசித்து, சிதசித்து என்தபன் பொருளை விளக்குக.

| | |
|---|---|
| சித்து | அறிவிக்காமலே அறியும் பொருள் (பதி / கடவுள்) |
| அசித்து | அறிவித்தாலும் அறிய மாட்டாத பொருள் (பாசம் - ஆணவம், கன்மம், மாயை) |
| சிதசித்து | அறிவித்தால் அறியும், அறிவிக்காவிட்டால் அறியாத பொருள் (பசு / உயிர்) |

02. சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள்களும் எவை?
- ॐ பதி
- ॐ பசு
- ॐ பாசம்

03. ஆன்மாக்கள் பேரின்பத்தை அனுபவிக்க முடியாமலிருப்பதற்கான காரணம் யாது?
- ॐ ஆன்மாக்கள் பாசங்களால் கட்டுப்பட்டிருப்பதால் ஆகும்.

04. கடவுளுக்குரிய இருநிலைகளும் யாவை?
- ॐ சொரூபலக்கணம்
- ॐ தடத்தலக்கணம்

05. இறைவனின் மூவகைத் திருமேனிகளும் யாவை?
- ॐ அருவம்
- ॐ உருவம்
- ॐ அருவுருவம்

06. ஆன்மாவின் இயல்புகள் யாவை?
- ॐ ஆன்மாக்கள் அநாதியானவை.
- ॐ ஆதிகாலம் தொட்டே பாசத்தால் கட்டுண்டு கிடப்பவை.
- ॐ அறிவித்தால் அறியக்கூடியவை
- ॐ பாசத்தையோ பதியையோ சார்ந்து நிற்பவை
- ॐ சூக்குமமானவை
- ॐ தனித்தனிச் சரீரங்களில் நின்று வினைகளைச் செய்து வினைப்பயன்களை அனுபவிப்பவை.

07. ஆன்மாக்களை அநாதிகாலமாகப் பீடித்திருக்கும் மலம் யாது?
- ॐ ஆணவ மலம்

08. மூவகை ஆன்மாக்களும் எவை?
- ॐ சகலர்
- ॐ பிரளயாகலர்
- ॐ விஞ்ஞானகலர்

09. இறைவனின் ஐந்தொழில்களும் எவை? அவை எவ்வாறு ஆன்மாக்களை உய்தி பெறச் செய்கின்றன?

- ௐ படைத்தல்
- ௐ காத்தல்
- ௐ அழித்தல்
- ௐ மறைத்தல்
- ௐ அருளல்

- ௐ இறைவன் ஐந்தொழில்கள் மூலமாக ஆன்மாக்களை படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் மூலமாக ஆன்மாக்களை உய்தி பெறச் செய்கின்றான்.

10. பற்றற்ற வினையை எவ்வாறு ஆற்றலாம்?

- ௐ "நான் செய்கிறேன்" என்ற எண்ணத்தோடு – பற்றோடு செய்யும் வினைகளே பிறவிக்குக் காரணமாய் அமைவன. அவ்வாறன்றி கடவுளுடைய திருவருள் செய்விக்கின்றது என்று, செயலைக் கடவுளிடம் ஒப்பித்துவிட்டால், அது நிலையற்ற உலக இன்பங்களைத் தராமல் நிலையான இன்பமாகிய முத்திக்குத் தகுதியடையவராக்கும்.

- ௐ சகலர் - ஆணவம், கன்மம், மாயை மூன்றினாலும் பீடிக்கப்பட்ட ஆன்மா
- ௐ பிரளயாகலர் - ஆணவம், கன்மம ஆகிய இரண்டினாலும் பீடிக்கப்பட்ட ஆன்மா
- ௐ விஞ்ஞானகலர் - ஆணவத்தால் மட்டும் பீடிக்கப்பட்ட ஆன்மா

## 18. திருவருட்பயன்

01. இறைவனின் இயல்புகளாக பதிமுது நிலையில் கூறப்பட்டுள்ளவை எவை?
- ௐ கடவுள் சர்வ வியாபகர்
- ௐ கடவுள் உயிர்களை உய்யக் கொள்ளும் சக்தியோடு கூடியவர்; கருணாமூர்த்தி
- ௐ கடவுள் ஒப்பில்லாதவர்
- ௐ கடவுள் ஆன்மாக்களுக்குப் பற்றுக் கோடாயுள்ளவர்
- ௐ கடவுள் வாக்கு மனாதீதராயினும் தடத்த வடிவமுடையவர்
- ௐ கடவுள் தடத்த வடிவினராயினும் அறிவிக்காமலே எல்லாம் அறிபவர்.
- ௐ கடவுள் தம்வழி நிற்பாரறிவைத் தம் வயம் செய்து நிற்பர்
- ௐ கடவுள் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நின்று உபகரிப்பவர்
- ௐ கடவுள் தம்வழி நிற்பார்க்குச் சுகஞ் செய்பவர்

02. இறைவன் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்கும் தன்மையை விளக்குக.
- ௐ இறைவன் சொற்பிரபஞ்சம், கருத்துப் பிரபஞ்சமாகிய எல்லா உலகங்களிலும் எல்லா உயிர்களிலும் வெந்நீரில் வெம்மைபோல் அவற்றோடு அவையேயாய் வேரற நிற்பான் (வேரற நிற்பினும்) தானேயாய், தனியாவான்

03. மூவகை உயிர்களும் எவை? அவற்றுக்கிடையிலான வேறுபாடு யாது?
- ௐ சகலர் - மூன்று மலங்களாலும் பீடிக்கப்பட்டது.
- ௐ பிரளயாகலர் - இரண்டு மலங்களாலும் பீடிக்கப்பட்டது.
- ௐ விஞ்ஞானகலர் - ஒரு மலத்தால் பீடிக்கப்பட்டது.

04. பசு, ஏன் சதசத்து என அழைக்கப்படுகிறது?
- ௐ ஆன்மா சத்தையும் (இறைவனையும்) அசத்தையும் (மும்மலங்கள்) சார்ந்திருப்பதால் சதசத்து என அழைக்கப்படுகின்றது.

05. ஆணவ மலத்தின் இயல்பு யாது?
- ௐ ஆணவமான இருளை விடக் கொடியது. அதாவது இருளானது பிற பொருட்களை மறைத்துத் தன் உருவத்தைக் காட்டும். ஆனால் ஆணவமானது தான் அகப்படுத்தி நிற்கும் பொருளையும் காட்டாது, தன் உருவத்தையும் காட்டாது இதனையே திருவருட்பயனில் பின்வருமாறு கூறுகின்றது.

  "ஒரு பொருளுங் காட்டா திருளுருவங் காட்டு
  மிரு பொருளுங் காட்டாதிது"

06. முத்தி கிடைக்கும் வரை ஆன்மாவிற்கு விளக்குப் போன்று ஒளி செய்பவை யாவை?
- ௐ ஏகம் எனப்படும் சிவசூரியன் மாயை

## 19. குருலிங்க சங்கம வழிபாடு

01. "ஞான குரு" எனப்படுவோர் யாவர்?

ૐ வாழ்க்கையில் பரிபக்குவம் ஏற்பட்டதும் பிறவியை ஒழிக்க ஞானாசிரியராக வருபவர் ஞானகுரு எனப்படுவார்.
உ-ம் சமய குரவர்கள், சந்தான குரவர்கள்

02. குருவின் சிறப்புக்கள் யாவை?

ૐ மனம், மொழி, மெய்களால் வணங்குவதற்குரிய சிறந்த இலட்சியமாக விளங்குபவர்.

ૐ ஆன்மீகத் துறையில் சந்தேகங்களைப் போக்கி நல்வழிப்படுத்தும் வழிகாட்டியாக விளங்குபவர்.

03. குருவுக்குச் செய்யும் வழிபாடு யாது?

ૐ குருவிடம் ஞானநூல்களைக் கேட்கும் போது அடக்கத்துடனும் பக்தியுடனும் கவனம் முழுவதையும் சொல்லப்படும் விடயத்திற் செலுத்திக் கேட்க வேண்டும். குருவின் உபதேசப்படி ஒழுகுதலே அவர்களுக்குச் செய்யும் வழிபாடாகும்.

04. பரார்த்தலிங்கம், ஆன்மார்த்த லிங்கம் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடு யாது?

ૐ சிவலிங்கம் இருவகைப்படும்

1. பரார்த்த லிங்கம் (தாவர லிங்கம்)
2. ஆன்மார்த்த லிங்கம் (இட்டலிங்கம்)

ૐ பரார்த்த லிங்கம் என்பது யாவரும் வழிபடுவதற்காகத் திருக்கோயில்களில் நிலையாகத் தாபிக்கப்படுவதாகும். ஆனால் விசேட தீட்சை பெற்றவர்கள் தாமே சிவலிங்கத் திருமேனியைத் தீண்டி வழிபட்டு இன்புற வேண்டும் என்ற விருப்பத்தால் தமது விசேட தீட்சா குருவிடமிருந்து பெற்று அவரது உபதேசப்படி பூசிக்கும் சிவலிங்கம் ஆன்மார்த்த லிங்கம் ஆகும்.

05. சணிகலிங்க பூசை என்றால் என்ன?

ૐ சணிகலிங்கம் என்பது மண், அரிசி, அன்னம், ஆற்றுமணல், கோமயம், வெண்ணெய், உருத்திராக்கம், சந்தனம், சர்க்கரை, மா முதலியவற்றுள் ஒன்றால் சிவலிங்க வடிவாய் அமைத்துப் பூசிக்கப்படுவது.

06. சணிகலிங்கம் அமைக்கப் பயன்படும் பொருட்கள் யாவை?

ૐ மண்
ૐ அரிசி
ૐ அன்னம்
ૐ ஆற்றுமணல்
ૐ கோமயம்
ૐ வெண்ணெய்
ૐ உருத்திராக்கம்
ૐ சந்தனம்
ૐ சர்க்கரை
ૐ மா

07. சங்கமம் என்றால் என்ன?

ૐ சிவனடியார் திருக்கூட்டம் சங்கமம் எனப்படும்.

08. சிவனடியார் இயல்பு யாது?

- ௐ சிவபெருமானிடம் அன்பு பூண்டொழுகுவார்.
- ௐ அவர்கள் சிவபெருமானை நினைத்தாலும் அவரைப் பற்றிக் கேட்டாலும் அவரது தெய்வத் திருமேனிகளைக் கண்டாலும் தம் வசமிழப்பார்
- ௐ சிவபெருமானுக்குத் திருத்தொண்டு புரிந்தும் அவரது புகழ் பாடியும் திருவைந்தெழுத்தை ஓதியும் இன்புறுவர்.
- ௐ சிவபெருமானை நினைக்கச் செய்யும் சிவசின்னங்களை அணிந்த திருமேனி உடையவராய் இருப்பார்.
- ௐ அடியார்க்குரிய பாவனை, செயல், வேடம் இவற்றையுடைய எவரும் சிவமாக எண்ணி வழிபடுவதற்குரியவரேயாவார்.

09. சிவனடியார் வழிபாட்டினால் ஏற்படும் நன்மைகள் யாவை?

- ௐ எமது கீழான எண்ணங்களை அகற்றி உயர்வான எண்ணங்களை உண்டாக்குகின்றது.
- ௐ உலகப் பற்றை நீக்கித் தெய்வப் பற்றை வளர்க்கின்றது.
- ௐ உள்ளத்தைத் தூய்மைப்படுத்துகின்றது.
- ௐ பக்தியையும் வைராக்கியத்தையும் வளர்க்க உதவுகின்றது.

10. சங்கம வழிபாட்டின் சிறப்பை நாயன்மார் எவ்வாறு சிறப்பித்துக் கூறியுள்ளார்?

- ௐ மாணிக்கவாசகர் - ‘‘அடியார் நடுவுளிருக்கும் அருளைப் புரியாய்’’
- ௐ அப்பர் - ‘‘ஆவுரித் தின்றுழலும் புலையரேனுங் கங்கைவார் சடைக் கரந்தார்க்கு அன்பராகில் அவ் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே’’

## 20. நாட்டார் வழிபாடு

01. ஆகமம் சாராத முறையில் வழிபடப்படும் தெய்வங்கள் ஐந்தினைக் குறிப்பிடுக.
ॐ வைரவர், ஐயனார், மதுரைவீரன், மாரியம்மன், திரௌபதை

02. திரௌபதை எந்த இதிகாசத்தின் நாயகியாக விளங்குகிறாள்?
ॐ மகாபாரதம்

03. திரௌபதை தெய்வ நிலையில் வைத்துப் போற்றப்படுவதற்கான காரணங்கள் யாவை?
ॐ நீதி உணர்வும் மான உணர்வும் வீரமும் பெண்மையும் நிரம்பியமையால் திரௌபதை தெய்வ நிலையில் வைத்துப் போற்றப்படுகின்றாள்.

04. இலங்கையிலுள்ள பிரதான திரௌபதையம்மன் ஆலயங்கள் எவை?
ॐ பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலயம்
ॐ புத்தளம் உடப்பு திரௌபதை அம்மன் ஆலயம்

05. திரௌபதையம்மன் ஆலயச் சடங்குகளைக் குறிப்பிடுக.
ॐ கொடியேற்றச் சடங்கு, சமயம் எடுத்தல், சுவாமி எழுந்தருளப் பண்ணல், நாட்கால் வெட்டும் சடங்கு, கலியாணக்கால் வெட்டும் சடங்கு, வனவாசம் போதல், தவநிலைச் சடங்கு, தீ மிதிப்பு, பாற்பள்ளயம்

06. வைரவர் எவ்வாறு தோற்றம் பெற்றார்?
ॐ சிவபெருமானிடமிருந்து தோன்றினார்.

07. வைரவர் "சேத்ரபாலகர்" என அழைக்கப்படுவதற்கான காரணம் யாது?
ॐ சேத்திரம் என்றால் இடம் - தலம் என்று பொருள். பாலகர் என்றால் பரிபாலிப்பவர்-காவல் செய்பவர் என்பது பொருள்.

08. வைரவருக்குரிய விசேட தினங்கள் எவை?
ॐ சித்திரைப் பரணி, ஐப்பசிப் பரணி, தை மாதத்து முதலாம் செவ்வாய்க்கிழமை

09. நாட்டார் வழிபாட்டில் பயன்படும் தாள வாத்தியங்கள் எவை?
ॐ உடுக்கு, மத்தளம், சல்லரி

10. நாட்டார் கலைகளாகக் கருதப்படுபவை எவை?
ॐ கூத்து, இசை, அலங்காரம்

11. அலங்காரக் கலை கோயில்களில் எவ்வாறு முக்கியத்துவம் பெறுகிறது?
ॐ காவடி, கரகம் முதலானவற்றைத் தயாரிப்பதிலே அலங்காரக் கலை முதன்மை பெறுகின்றது. சடங்குக் காலங்களில் கும்பம் அலங்கரித்தல், கோயில் வளாகத்தை அலங்கரித்தல் என்பவற்றில் அலங்காரக் கலையின் சிறப்பினைக் கண்டு கொள்ளலாம்.

உ-ம் கோயில் வாயில்களில் அமைக்கப்பெறும் தோரணங்கள் குறிப்பிட்டுக் கூறலாம். மூங்கிற் கழிகளாலும் குருத்தோலை, இலை, குழை முதலானவற்றாலும் உயர்ந்து விரிந்த வாயில் தோரணங்கள் முதலானவற்றைக் கூறலாம்.

## 21. ஈழத்தில் சைவத்தின் தொன்மை

01. இலங்கையை சிவபூமி என்று சிறப்பித்தவர் யார்?
- ௐ திருமூலர்

02. இலங்கையில் சிவபக்தனாக அரசாண்டவன் என்று இதிகாசங்களில் குறிப்பிடப்படுபவன் யார்?
- ௐ இராவணன்

03. அவனைப் போற்றிப் பாடிய அருளாளர்கள் யாவர்?
- ௐ திருஞானசம்பந்தர்
- ௐ மாணிக்கவாசகர்

04. பூர்விக இலங்கையில் சைவத்தை நிலைபெறச் செய்தவர்கள் யாவர்?
- ௐ நாகர்கள்

05. ஸ்ரீ தட்சிணகைலாய புராணம் எந்தத் தலம் பற்றிய நூல்?
- ௐ திருக்கோணேஸ்வரம்

06. நாகர் எவற்றை வழிபட்டனர்?
- ௐ நாகவழிபாடு

07. மிகப் பழமையான சிவலிங்கங்கள் இலங்கையில் எங்கு கிடைத்துள்ளது?
- ௐ வந்தாறுமூலை
- ௐ பனங்காமம்
- ௐ கீரிமலை
- ௐ இணுவில் (காரைக்கால்) சிவன்கோயில்

08. மணிநாகன் என்ற பெயர் எங்கெல்லாம் காணப்பட்டது?
- ௐ நாக சிற்பங்களில்
- ௐ வழிபாட்டுச் சின்னங்களில்
- ௐ கோயில் பாவனைக்குரிய பொருட்களில் (விளக்கு, அம்மி, தூண்கள்)
- ௐ இலிங்கம், நந்தி, ஆவுடையார் விளக்கு முதலியவற்றில்

09. சிவவழிபாடு தவிர வேறு எவ் வகையான வழிபாடு பண்டைக் காலத்தில் கா ணப்பட்டது?
- ௐ நாக வழிபாடு
- ௐ கணபதி வழிபாடு
- ௐ வைரவர் வழிபாடு
- ௐ குமாரக் கடவுள் வழிபாடு
- ௐ திரிசூல வழிபாடு

10. நாகர்கள் எவ்விடங்களில் கற்றளிகளை அமைத்தனர்?
- ௐ முன்னேஸ்வரம்
- ௐ திருக்கரசை
- ௐ நவாலி (கண்ணகையம்மன் கோயில்)

## 22. ஈழத்து ஆலயங்கள்

### 1. களுதாவளைப் பிள்ளையார் ஆலயம்

01. களுதாவளைப் பிள்ளையார் ஆலய வரலாறுடன் தொடர்பான கதை ஒன்றினை எழுதுக.

ஓ இவ்வாலயம் அமைந்துள்ள இடம் முன்னர் அடர்ந்த வனப்பகுதியாக இருந்தது. வேடுவர் தலைவனான களுவன் என்பன் வேட்டையாடும் பொருட்டு இங்கு வந்தான்; காரியம் வெற்றி அடையும் பொருட்டு இறையருளை நாடி வெற்றிலைச் சடங்கு (வெற்றிலையைக் கொண்டு செய்யப்படும் சடங்கு) செய்வதற்கு இவ்விடத்தை தெரிவு செய்தான்; சடங்கினை நிறைவேற்றி இறையருளும் பெற்றான். இவ்வாறு வேடுவர் தலைவனான களுவன் வழிபட்ட இடம் களுதேவாலயம் என அழைக்கப்பட்டது. பின்னர் ஊரின் பெயர் களுதாவளை என்று ஆனது.

02. களுதாவளைப் பிள்ளையார் ஆலய தலவிருட்சம் எது?

ஓ வில்வமரம்

03. இவ்வாலயத்தின் மூலமூர்த்தியின் சிறப்பு யாது?

ஓ சுயம்புலிங்கப் பிள்ளையார்

04. இவ்வாலய அமைப்பு எவ்வகையானது?

ஓ கலைவனப்பு மிக்க சிற்பங்களோடும் ஓவியங்களோடும் காட்சியளிக்கும் இந்த ஆலயம் மடாலய வகையைச் சார்ந்தது.

05. களுதாவளைப் பிள்ளையார் ஆலய வரலாற்றை எவ்வாறு அறியலாம்?

ஓ களுதேவாலயக் கல்வெட்டின் மூலம் அறியலாம்.

## 2. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம்

01. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் தொடர்பாக நிலவும் ஐதீகம் ஒன்றினை எழுதுக.

- ௐ மட்டக்களப்பு மான்மியம் எனும் நூலில் இவ்வாலயத்தின் தோற்றம் பற்றிய குறிப்புகள் உள்ளது. அந்த வகையில் மண்முனைப்பகுதிய உலக நாச்சி என்னும் அரசி ஆண்டு வந்தாள். அக்காலத்தில் தேன் எடுக்கச் சென்ற வேடர், கொக்கட்டி மரம் ஒன்றை, தேன் எடுப்பதற்காக வெட்டினார். மரத்திலிருந்து உதிரம் பெருகியது. பதைபதைத்த வேடுவர் தலைவன், நடந்ததை உலக நாச்சியிடம் தெரிவித்தான். உலகநாச்சி தன் பரிவாரங்களுடன் குறித்த இடத்திற்குச் சென்று பார்த்தபோது அவ்விடத்தில் சிவலிங்கம் ஒன்று புதையுண்டு கிடக்கக்கண்டு அதிசயித்தான். அந்த
  இடத்தில் ஆலயம் ஒன்றை அமைப்பித்தான். ஆலயத் திருப்பணிக்கு மட்டக்களப்பை ஆண்ட தருமசிங்கன் உதவி புரிந்தததாகக் கூறப்படுகின்றது.

02. கொக்கட்டிச்சோலை ஆலயத்திற்கு திருப்பணி செய்த மன்னர்கள் யாவர்?

- ௐ குளக்கோட்ட மன்னன்
- ௐ கலிங்கமாகன்

03. அங்கு திருச்சூகர வேட்டை நடைபெறும் தினம் எது?

- ௐ தேர்த்திருவிழா நாள் இரவு நடைபெறும்

04. வண்ணக்கர், சங்கமர் எனப்படுவோர் யாவர்?

- ௐ வண்ணக்கர் - ஆலயத்தின் பரிபாலகர்
- ௐ சங்கமர் - பூசை செய்யும் வீர சைவக் குருமார்

05. குடுக்கை கூறுதல் நிகழ்வு ஏன் இடம்பெறுகிறது?

- ௐ திருவிழாவில் பங்கு கொண்ட அனைவரையும் கௌரவிக்கும் முகமாக இந்நிகழ்வு இடம்பெறுகின்றது.

06. இக்கோயில் எழுந்தருளியுள்ள இறைவன், இறைவி பெயர் யாது?

- ௐ இறைவன் - தான்தோன்றீஸ்வரர்
- ௐ இறைவி – பார்வதி அம்பிகை

## 3. நல்லூர்க் கந்தசுவாமி கோயில்

01. நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைக் கட்டிய மன்னன் யார்?
    ௐ 6ம் பராக்கிரமபாகுவின் மகனாகிய செண்பகப் பெருமாள்

02. சிங்கை பரராசசேகரன் செய்த திருத்தொண்டுகள் யாவை?
    ௐ நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தை நடுநாயகமாகக் கொண்டு, நான்கு எல்லைகளிலும் 4 கோயில்களைக் கட்டினான். வடக்கே சட்டநாதர் கோயிலும் கிழக்கே வெயிலுகந்த விநாயகர் கோயிலும், தெற்கே கைலாசநாதர் கோயிலும் மேற்கே வீரமாகாளி அம்மன் கோயிலும் அமைக்கப் பெற்றன.

    ௐ நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குச் சமீபமாக ஓர் எரியை அமைத்தான். யமுனா நதியின் திவ்விய தீர்த்தத்தைக் கொணர்வித்து அந்த ஏரியில் கலந்து கொண்டு அதற்கு யமுனா ஏரி எனப் பெயரிட்டான். அது மருவி "யமுனாரி" என ஆயிற்று.

03. போர்த்துக்கேயரால் அழிவுற்ற ஆலயத்தை மீண்டும் புதிதாகக் கட்டியவர் யார்?
    ௐ ஒல்லாந்த ஆட்சியில் அரசாங்க உத்தியோகத்தராக இருந்த இரகுநாத மாப்பாண முதலியார்

04. இவ்வாலயத்தின் மூலமூர்த்தியாக விளங்குவது எது?
    ௐ வேல்

05. இவ்வாலயத்தில் எத்தனை நாள்கள் உற்சவம் நடைபெறும்? எப்போது நிறைவு பெறும்?
    ௐ ஆவணி அமாவாசையைத் தீர்த்த தினமாகக் கொண்டு 25 நாட்கள் மகோற்சவம் நடைபெறும்.

## 4. நயினை நாகபூஷணி அம்மன் ஆலயம்

01. நயினாதீவு இலங்கையின் எப்பாகத்தில் அமைந்துள்ளது?
   ௐ யாழ்ப்பாணக் குடா நாட்டின் தென்மேற்காக உள்ள நயினா தீவில்

02. இத்தீவுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை?
   ௐ நாகதீபம், மணிபல்லவம், மணித்தீவு, பிராமணத்தீவு

03. நாகபூசணி அம்மன் ஆலயத்தை அமைத்தவர்களாகக் கருதப்படுவோர் யாவர்?
   ௐ இயக்கர், நாகர்

04. இக்கோயிலுடன் தொடர்புடைய கதை யாது?
   ௐ முன்னொரு காலத்தில் நாகம் ஒன்று இத்தீவகத்தின் வடக்கே உள்ள புளியந்தீவிலிருந்து நாடோறும் பூக்கள் கொண்டு வந்து அம்பிகையைப் பூசித்து வந்தது. ஒரு நாள் பூக்கொண்டு வரும் வழியில் கருடன் ஒன்று அதனைக் கொல்ல முயன்றது. நாகம் அச்சம் கொண்டு கடலில் இருந்த கல்லொன்றுடன் சுற்றிக் கொண்டது. பிறிதொரு கல்லில் அமர்ந்த கருடன் நாகத்தைக் கொல்லத் தருணம் பார்த்துக் கொண்டிருந்தது. அப்பொழுது அவ்வழியே மரக்கலம் ஒன்றிலே வந்த வணிகன் அக்காட்சியைக் கண்டான். நாகத்தின் மீது அனுதாபம் கொண்டான். கருடனிடம் ''நீ நாகத்தைக் கொல்ல வேண்டாம்'' என வேண்டினால் கருடனோ, ''நீ உனது செல்வங்கள் யாவற்றையும் என்முன் வைத்தால் அதனைக் கொல்லமாட்டேன்'' எனக் கூற வணிகனும் அவ்வாறே செய்தான். உடனே கருடன் அவ்விடத்தே விட்டுச் சென்றது. வணிகன் வீடு சென்ற போது அன்றிரவு அறையில் விலைமதிப்பற்ற நவரத்தினங்களில் இருந்து தெறித்த ஒளி என்பதைக் கண்டு இது அம்பிகையின் திருவருட் செயல் என உணர்ந்து அம்பிகைக்கு பெருங்கோயில் கட்டினான்.

05. இக்கோயிலின் மூலமூர்த்தியின் தோற்றம் எத்தகையது?
   ௐ ஐந்து தலை நாகபடக் குடையின் கீழ் அம்பாள் வீற்றிருக்கின்றாள்.

06. இக்கோயிலின் மகோற்சவம் ஆரம்பமாகும் தினம் யாது? எத்தனை நாள்கள் மகோற்சவம் இடம்பெறும்?
   ௐ ஆனிப் பூரணையைத் தீர்த்த நாளாகக் கொண்டு மகோற்சவம் 15 நாட்கள் நடைபெறும்.

07. இந்த ஆலயத்துக்கு உரிய சிறப்பான உற்சவம் யாது?
   ௐ தெப்பத் திருவிழா

## 5. புன்னைச்சோலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம்

01. புன்னைச்சோலை ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயம் எவ்வாறு தோற்றம் பெற்றது?
 ௐ முன்னர், புன்னைச்சோலைக் கிராமத்தின் பெரும்பகுதி காடாகவே இருந்தது. அவ்வழியால் சென்ற பெரியார் என்னும் அடியவருக்கு பத்திரகாளியம்பாள் காட்சியளித்தாள். அந்த அதிர்ச்சியில் அவர் மயக்கமுற்றார். மயக்கம் தெளிந்து அம்பாளைக் காணாது உருகிநின்ற அடியவர் அம்பாளுக்கு அவ்விடத்திலேயே சிறிய ஆலயம் அமைத்து வழிபடத் தொடங்கினார்.

02. இங்கு எந்தக் காலத்தில், எத்தனை நாட்கள் சடங்குகள் இடம்பெறுகின்றன?
 ௐ ஆனி மாதத்தில் ஆறுநாள் இடம்பெறும்.

03. அவற்றுள் பிரதானமான சடங்கு எது?
 ௐ தீ மிதிப்புச் சடங்கு

04. இக்கோயிலின் தோற்றத்துடன் தொடர்புடைய அடியவர் பெயர் யாது?
 ௐ பெரியார்

05. இக்கோயிலில் இடம்பெறும் சடங்குகளை வரிசைப்படுத்துக.
 ௐ திருக்கதவு திறத்தல், அம்மனை எழுந்தருளப்பண்ணல், கன்னிமார் பிடித்தல் கலியாணக்கால் வெட்டுதல், எரிக்கிளை (எருக்கலை) வெட்டுதல், நெல்லுக்குற்றுதல், தீமிதிப்புச் சடங்கு

## 23. பிள்ளையார் கதை

01. "பிள்ளையார் கதை" என்ற நூலை இயற்றியவர் யார்?
   - ॐ வரதபண்டிதர்

02. இந்நூல் எந்த விரதகாலத்தில் பாராயணம் செய்யப்படுகிறது?
   - ॐ விநாயக சஷ்டி

03. இந்த நூலில் விநாயகசஷ்டி விரதத்தை அனுட்டித்து நன்மை அடைந்தவர்களாகக் குறிப்பிடப்படுவோர் யாவர்?
   - ॐ பஞ்சபாண்டவர்கள்
   - ॐ திருமால்
   - ॐ வச்சிரமாலி என்னும் அரசன்
   - ॐ விக்கிரமாதித்த மன்னனின் மனைவி இலக்கண சுந்தரி

04. இலக்கண சுந்தரிக்கு துன்பம் ஏற்பட்டதற்கான காரணம் யாது?
   - ॐ விநாயகசஷ்டி அனுஷ்டிக்கின்ற காலத்தில் தனது கவனக் குறைவால் விரதக் காப்பை அவிழ்த்து காய்ந்த கொவ்வைக் கொடி ஒன்றின் மீது போட்டு மறந்து விட்டாள்.

05. பிள்ளையார் பெருங்கதையைக் கேட்போர் பெறும் பயன்களாகக் குறிப்பிடப்படுபவை யாவை?
   - ॐ பொன், பொருள், கல்வி, புத்திரபாக்கியம் முதலான எல்லாச் செல்வங்களும் கிட்டும்.
   - ॐ சிறந்த வாழ்வு வாழ்வார்கள்
   - ॐ விரதம் நோற்காது அருகிருந்து அக்கதையைக் கேட்டவர்களுக்கும் கேடு வராது. அவர்கள் எல்லாப் பிறப்புக்களிலும் சிறப்போடு வாழ்வார்கள்.

## 24. சைவ வித்தியா விருத்திச் சங்கம்

01. சைவ வித்தியாவிருத்திச் சங்கம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
- ௐ 1923.12.09

02. சைவ வித்தியா விருத்திச் சங்க ஆரம்பகால உறுப்பினர்கள் யாவர்?
- ௐ தலைவர் - சேர்.பொன். இராமநாதன்
- ௐ செயலாளர் - W. விஜயரத்தினம்
- ௐ பொருளாளர் - F.G. பீரிஸ்
- ௐ உறுப்பினர்கள் -
    1. சேர். வைத்தியலிங்கம் துரைசாமி
    2. எஸ். குமாரசூரியர்
    3. சு. இராசரத்தினம்
    4. எ. மகாதேவா
    5. சு. நடேசன்

03. திரு. சு. இராசரத்தினம் அவர்கள் “இந்து போர்ட்” என்ற அடைமொழியோடு அழைக்கப்பட்டதன் காரணம் யாது?
- ௐ சங்கத்தின் சாதாரண உறுப்பினராக இருந்த சு. இராசரத்தினம் 1928 விஜயதசமி தினத்தில் உருவான சைவாசிரிய கலாசாலைக்கும், சங்கத்தினது பாடசாலைகளுக்கும் முகாமையாளராக தெரிவு செய்யப்பட்ட காலத்திலிருந்து தனது மரணம் வரை (1970) சங்கத்துக்காகத் தன்னை அர்ப்பணித்துப் பணிபுரிந்ததன் விளைவாகவே அவர் அவ்வாறு அழைக்கப்பட்டார்.

04. சைவ வித்தியா விருத்திச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் யாது?
- ௐ இலங்கை வாழ் சைவத் தமிழ்ச் சமூகம் தமது சமய, சமூக, பண்பாட்டு அடையாளங்களை மீளுருவாக்கம் செய்வதோடு, சைவ சமய அடிப்படையில் சமய வாழ்வுக்கும் உலகியலுக்குமான கல்வியறிவை மேம்படுத்துவதாகும்.

05. இச்சங்கம் சைவ மக்களுக்கு ஆற்றிய பணிகள் யாவை?
- ௐ பாடசாலைகளை நடாத்தியமை.
- ௐ சைவாசிரிய கலாசாலை நிறுவியமை.
- ௐ காவிய பாடசாலை நடாத்தியமை.
- ௐ தொழிற்பயிற்சிப் பாடசாலைகளை நடாத்தியமை
- ௐ ஆதரவற்ற சிறுவர்களுக்கான இல்லங்களை நடாத்தியமை.

## 25. சைவ தருமம்

01. இந்து சமயத்திற்கு "சனாதன தர்மம்" என்ற பெயர் வழங்குவதன் காரணம் யாது?
    ॐ இந்து சமயம் அநாதிகாலமாக அழிவின்றி நிலவிவருகின்ற ஒரு நெறிமுறையாகும். ஆதலால் அதனைச் சனாதன தருமம் என்பர். (சனாதனம் - நிலையானது, அழிவற்றது)

02. பதிபுண்ணியம் என்றால் என்ன?
    ॐ கடவுளுக்கும் கடவுளின் அடியவர்களுக்கும் செய்யும் தொண்டுகள் பதிபுண்ணியம் எனப்படும்.

03. பசுபுண்ணியம் என்றால் என்ன?
    ॐ மனிதர்களுக்கும் பிற உயிர்களுக்கும் செய்யும் நற்கருமங்கள், தொண்டுகள் பசுபுண்ணியம் எனப்படும்.

04. உண்மை அறம் எவ்வாறானது?
    ॐ மனதிலே எந்த அழுக்கும் இல்லாது நல்ல சிந்தனையோடு இருத்தலே சிறந்த அறமாகும். அதாவது எல்லோரும் நன்றாக வாழ வேண்டும் என்ற நினைப்பே பேரறமாகும்.

05. அறங்களின் அடிப்படை யாது?
    ॐ அன்பு

06. தானங்களில் சிறந்த தானமாகக் கருதப்படுவது யாது?
    ॐ அன்னதானம்

07. எமது முன்னோர் ஆற்றிவந்த செயல்கள் ஐந்தினைக் குறிப்பிடுக.
    ॐ வழிப்போக்கர்கள் இளைப்பாறிச் செல்வதற்காக தமது வீடுகளின் முன்பாக திண்ணைகள் அமைத்தார்கள்.
    ॐ தாக சாந்திக்காக ஆங்காங்கே வீதியோரங்களில் தண்ணீர்ப் பந்தல்கள் அமைத்தார்கள்.
    ॐ வீதியோரங்களில் வெயிற் கொடுமையிலிருந்து பாதுகாக்க நிழல் தரும் மரங்களை அமைத்தார்கள்.
    ॐ வழிப்போக்கர்கள் இளைப்பாறுவதற்காக பொது மடங்குகளை அமைத்தார்கள்.
    ॐ கால்நடைகளின் (பூச்சிகள், உண்ணிகள்) முதலானவை கடிப்பதனால் ஏற்படும் துன்பங்களைப் போக்குவதற்காக சிறுதூண்கள் (ஆவுரோஞ்சுகல்) அமைத்தார்கள்.

08. சைவசமயம், அறத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதன் காரணம் யாது?
    ॐ மக்களுக்குச் செய்யும் தொண்டு மகேசனுக்குச் செய்யும் தொண்டாக இருப்பதே காரணமாகும்.